உ

சிவமயம்.

"துறவி"

மன்மத
மலர் 1

திங்கள் வெளியீடு.

சித்திரை
இதழ் 4.

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்,

சுவாமி சொருபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரு 2/- தனி இதழ் அணா 3/-

ஓம்

" துறவி "

பொருளடக்கம்.

ஓம்.

“துறவி”

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	சித்திரை இதழ் 4.

கடவுள் வாழ்த்து.

நினைந்துருகு மடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைக ணீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வைவைத்தார்
செழுமதியின் றளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துறுவி மணிமகுடத் தேறத்துற்ற
வினமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்பில்கி
நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே. —அப்பர்.

தூயதமிழ் நாட்டுத் துறவிகள் சங்கமென்றும்
ஞாயிறுபோன் மக்களுக்கு நன்மைசெயத்—தாயாகும்
உண்ணா முலையாம் உமைசே ரொளிப்பிழம்பாம்
அண்ணா மலைதுணையா மால்.

★

புத்தாண்டு.

இன்று புத்தாண்டு பிறந்தன. இன்னன்னாளைத் தமிழ் மக்கள் பெரிதும் கொண்டாடுகின்றனர். இன்று சிலர் புறக்கணிக்கின்றனர் பண்டைத் தமிழனின் பண்பாட்டை. அவர்களால் மூடக் கொள்கையைக் கையாள்பவர்களென கூறுதற் கிலக்காகிய மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களை ஆய்ந்து பார்க்கின் அவையெல்லாம் உடலுக்கும் உயிருக்கும் உறுதிபயப்பனவாகவே அமைந்துள்ளன இளமை செல்வம் யாக்கை முதலியவையோடு கூடிய நிலையில்லா வாழ்க்கையிற் சென்றுழலும் மனதைச் சிறிது நேரம் இறைவழிபாட்டிற் செலுத்தல் நன்மை பயப்பனவாகும். “நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம், நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் — நீரில், எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே, வழுத்தாத தெம்பிரான் மன்று” என்பது நமது குமர குருபரரின் திருவாக்கு.

எல்லா வளங்களாலும் சிறப்புற்று விளங்குவது நம் நாடு சிவாலயங்களும், விஷ்ணு ஆலயங்களும் ஆங்காங்கு நாட்டைஅழகுறச் செய்கின்றன. பசிப்பிணியைப் போக்கும் அறக் கூழ்ச்சாலைகளும் அமைந்துள்ளன நாட்டு மக்களை நல்லொழுக்கத்தில் நிலைபெறச் செய்யவும், பிறவிக்கஞ்சி வீடுபேற்றை விரும்பினோர்க்குக் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல், என்னும் நான்கினையும் பயிலச் செய்து அதன் பயனும் வீட்டினை யடையச் செய்யவும் தொன்றிய பல சைவ, வேதாந்த மடங்களும் நிறைந்துள்ளன. பல ஞானிகளும் யோகிகளும் புலவர்களும் தோன்றிய நாடு, நீதி வழுவாத மன்னவர் பலர் ஆண்டநாடு, பல நாட்டினரும் வியக்கும் நம் நாடு, தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது என்பதற்கியைய உழவர்கள் பெருகிய நாடு "செந்தமிழ் நாடென்ற போதினிலே இன்பத் தேன் வந்து பாயுதென் காதினிலே" என்றார் பாரதியார். இத்தனை சிறப்புக்களும் நிறைந்த நம் தண் தமிழ் நாட்டிலே இன்றைக்கு உடுக்க உடையும் உண்ண உணவும் இருக்க இடமும் இன்றித் தவிக்கின்றனர் பலர். பல நலங்களோடும் இன்ப வாழ்வு வாழ்கின்றவர் சிலர். இதற்குக் காரணம் என்ன? வேண்டுவார் வேண்டுவதே கொடுத்தருள்பவனும் உலகிற்கும் உயிர்கட்கும் தாயும் தந்தையும் ஆய இறைவனை மறந்தோம் எண்ணற்ற இன்னல்களைத் துய்க்கின்றோம். இவை நீங்கி எல்லா நலன்களையும் பெற்று அறப் பண்பாடுடையவர்களாக வாழ எல்லாம் வல்ல இறைவனை உள்ளத்தே எண்ண வேண்டும் என்பதை நமது இராமலிங்க வள்ளலார்.

"நீருண்டு பொழிகின்ற காருண்டு விளைகின்ற
  நிலனுண்டு பலனு முண்டு
நிதியுண்டு துதியுண்டு மதியுண்டு கதிகொண்ட
  நெறியுண்டு நிலையு முண்டு
ஊருண்டு பேருண்டு மணியுண்டு பணியுண்டு
  உடையுண்டு கொடையு முண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தமுறும்
  உளமுண்டு கொடையு முண்டு
தேருண்டு கரியுண்டு பரியுண்டு மற்றுள்ள
  செல்வங்கள் யாவு முண்டு
தேனுண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
  தியானமுண் டாயிலரசே........." எனக் கூறியுள்ளார்.

ஆகவே இன்ப வடிவினனாகிய இறைவனை அன்பினால் வழிபடுவோமாக

—பதிப்பாளர்.

நீதித் துண்டுகள்.

தவத்திரு. குக. சதாசிவ அடிகளாரவர்கள்
(சங்கேந்தி)

1 மானுடப்பிறப்பே மற்றெல்லாப் பிறப்பினுள்ளும் விசேடம். இதுவே எச்சமயத்தார்க்கும் உடன்பாடு. அறஞ்செய்து நற்கதி பெறலே இப் பிறப்பின் பயன். முற்பிறப்பின் நல்வினை அதனை விளைவிக்கும். ஆதலின் அருமையாக மனிதராய்ப் பிறந்தவர் அப் பிறப்பின் பெருமைக்கு ஏற்ற நல்லறிவையும், நல்லொழுக்கத்தையும் உடையராய் இவ்வுடம்பைக் கொண்டு மறுமைக்கு உறுதிசெய்து கொள்ளுதலே சீரிய மாண்பாகும்.

2 இளமையும், செல்வமும், உடம்பும் நிலையில்லாதன. கிழத்தனமும், ஏழைமையும், வியாதியும், மாணமும் நேரக்கூடியவை இதை யுன்னித் தவம்புரிந்து இருவினையையும் ஒழித்து முத்திபெறல் வேண்டும் இன்றேல் கருமவசத்தால் மறுபிறப்பு நேர்தல் நிச்சயம்.

3 உலகத்தில் ஒருவன் எத்தனை சிறந்த ஆயுதமுள்ளவனாக யிருந்தாலும், எவ்வளவு பெருந் தோற்றமுடையவனாக யிருந்தாலும், தனக்குப் பாதுகாவலாக எவ்வளவு சேனை வைத்திருந்தாலும், இவை யொன்றுக்கும் அஞ்சாது குறித்த ஆயுள் முடிவில் அவன் உயிரைக் கவர்தற்கு யமன் வருதல் உண்மை. ஆதலின் யாக்கை நிலையாமை யுணர்ந்து எல்லாத் துன்பமுமற்று முத்திபெருதற்குரிய வழியைக் காட்டும் சாத்திரத்தை இளமை தொடங்கியே பயிலக்கடவன்.

4 சூரபன்மனென்னும் அசுரனனவன் தன் சரீரமும் அரசாட்சியும் நிலையென்றெண்ணி

"அண்ட மாயிரத் தெட்டையுந் தனியரசாட்சி
கொண்டு வைகினன் குலத்தொடு மமரர்தங் குழுவைத்
தொண்டு கொண்டனன் யாவர்வந் தெதிர்க்கினுந் தொலையேன்
உண்டு கொல்லிவ னெனக்குநே ராகவே யொருவர்."

எனக் கூறினன். அவன் இறுதியில் குமாரக்கடவுளோடு எதிர்த்து அழிந்தான். ஆதலால் நிலையில்லாதவற்றை நிலையென்றுணரும் புல்லறிவாண்மை கடை. உண்டாகக் கூடிய பொருள்களெல்லாம் அழியக்கூடியவை. புல்லறிவால் அப்பொருள்களின் பற்று பிறவித் துன்பத்திற்கேதுவாகும். அப்பற்று வீடெய்துவார்க்குத் தடை.

5 உயர்குலத்திற் பிறந்தவரும் கல்வி யிலராயின் தாழ்வடைவர் இழிகுலத்திற் பிறந்தவரும் கல்வியுடையராயின் உயர்வடைவர். உயர் குடிப் பிறப்பைக் காட்டிலும் கல்வியறிவுடைமை சிறக்கும். உடம் போடு ஒழியும் குலப் பெருமையினும் உயிரோடு செல்லுங் கல்வி யுயர்ச்சி சிறந்தது.

6 கல்வி, ஈகை, செல்வம், புகழ், வீரம், செல்வாக்கு ஆகிய இப்பொருள்கள் உண்மை மார்க்கத்திலொழுகுபவரிடம் இருந்தாற்றான் மேன்மைப்படும். இவைகள் பிறரிடமிருந்தால் கர்வத்தை யுண்டாக்கிப் பொலிவு பெறுது.

7 துரோணர்து பிம்பத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்து வந்த ஏகலைவனென்ற வேடனுக்கு குருபக்தி மிகுதியால் வில்வித்தை முழுதும் கைகூடியதுபோல குருமூலமாகவே நூல்களைப் படித்துச் சந்தேக விபரீதங்களை நீக்கிக்கொள்ள வேண்டும். குருபத்தியே சிறந்த கல்வியைத் தரும். தனியே நூல்களைப் படிக்கத் தொடங்கினுல் தேர்ந்த ஞானமுண்டாகு மென்கிற நிச்சயமில்லை.

8 பொய்யாமை, வாய்மை, லோபமின்மை, பெண் வழிச்செல் லாமை, கள்ளுண்ணுமை என்னும் ஒழுக்கங்களை ஒருவன் உடைய வனுனல் அவன் பிறராற் கூறப்பட்ட நீதி நூற்களிலுள்ள மேன்மை களெல்லாம் பூரணமாகப் பெற்றவனுவன்.

9 ஆடை குலைந்தவனுக்கு உடனே கைசென்று உதவுதல்போல சிநேக தருமந் தவருத உத்தமர் தமது நண்பருக்கு ஆபத்து நேர்ந்த போது விரைந்து உதவிசெய்து அவா துன்பம் தீர்ப்பார். அவ்வுத் தமரின் உயர் நட்பை அவர் செய்யும் உதவியைக்கொண்டு அறியலாம்

10 பயிர் செய்வார் அதன் பயனுக் கிடையூரான புல்லைக் களைந்து நெற்பயனைக் கொள்ளுதல்போல உயிர்வாழ்வார் அதன் நற் பயனுக்கு இடையூரான தீச்குணங்களை யொழித்து நற்செயல்களைச் செய்து நல்வினையாகிய பயனைப் பெறவேண்டும்.

11 ஒருவன் தானே ஆராய வல்லவனு யிருந்தாலும் ஆலோ சனையில் தேர்ந்த துணைவருடன் இருந்து ஆராய்தல் சிறந்தது. "தூக்கி வினைசெய்" என்ற ஒளவை மூதாட்டியார் வாக்கின்படி இலாப நட்டங்கள். முதலியவற்றை நன்ருக ஆராய்ந்து தொழில் செய்வார்க்கே காரியம் சித்திக்கும்; நல்வாழ்வு வாய்க்கும்.

12 பழித்தற்கிடமான தீய வழிகளால் உண்டான இலாபம் அப்பொழுது ஆக்கம் போலத் தோன்றினும், செல்வம், சந்தானம் சுற்றம் முதலிய ஐஸ்வரியங்கள் நீடித்து வளர்தற்கு ஏதுவாகாது.

நிலைபெறற புகழ்தருஞ் செயல்களைக் கடைப்பிடித்து நன்னெறியிற் றவருதொழுகி ஐஸ்வரியங்களை வளர்த்தல் வேண்டும். இம்மைப் பயனுய் இவ்வுலகில் நிகழ்ந்து அவரிறந்தாலும் அவருடைய குணம் செயல்களை உலகம் உயர்த்துக்கூற நிலைபெறும் புகழே தேடத்தக்க ஐஸ்வரியததை வளர்க்குங் கருவி.

13 மெய் வருத்தத்தினுலாவது, பொருளில்லாமையினுலாவது தனக்குத் துன்பம் வந்தவிடத்து, 'துன்புள தெனினன்றோ சுகமுளது' என்ற கம்பர் வாக்கின்படி சிறிதும் மனங்கலங்காது தொழிலில் முயன்றவனே காரியசித்தியா லின்பமடைவான்.

14 அதிஷ்டமிருந்தால் எந்த நன்மையும் தானே வலிய நேரிடும் என்று முயற்சி செய்யாதிருத்தல் அறிவன்று; விதியிருந்தால் விளக்கு அவியாதென்று துணிந்து அலைகாற்றடிக்குமிடத்தில் தீபம் வைத்துப் பார்த்திடும் பேதையருண்டோ? ஊழின் தன்மை முன்னரே யுணரமுடியாது. அதனை எதிர்பார்த்து முயற்சி ஒழிய லாகாது; தெய்வம் முயற்சி மூலமாகவே பலனளிக்கும்.

15 வெஃகல், வெகுளல், திக்காட்சி, எனமனத்தில் தோன்றும் பாவ மூன்றும், பொய், கோள், கடுஞ்சொல், பயனில் சொல் எனச் சொல்லில் தோன்றும் பாவம் நான்கும், கொலை, களவு, காமம், என உடம்பில் தோன்றும் பாவம் மூன்றுமாகத் தீவினை பத்து வகைப் படும் ஆகலால் இவற்றை முதலிற் கருதுதலும், அதன் பின் சொல்லுதலும், அதற்குப் பிறகு செய்தலுங் கூடாவாம்.

16 பிறரிடம் தான் பணிவுகொண்டு ஒழுகுபவனுக்கே பெருமை யுண்டாகுமாதலால், உண்மையாகத் தனக்குப் பெருமை உண்டாதலை வேண்டுபவன் பிறரிடம் பணிவு பூண்டு ஒழுகக் கடவன். பிறருக்கு மரியாதை செய்பவனே தானும் மரியாதயைப்பெறுவன். (தொடரும்)

மானிடப் பிறவியின் அருமை.

சுவாமி அருணகிரிநாதர் அவர்கள்
(த. நா. து. சங்க அமைப்பாளர்,)
குளப்பாக்கம், சென்னை.

முன் (மலர் 1 இதழ் 3 பக்கம் 25) தொடர்ச்சி.

எதனுல் மனிதப்பிறவியை பெறுதற்கரிய பிறவியென சிறப்பித்துக் கூறப்படுகின்றதெனின், கூறுதும். மற்றையப் பிறவிகளால் பெறுதற்கரிய முத்தியாகிய பேற்றைப் பெறுதற்கு (அடைவதற்கு) இன்றியமையாத சிறந்த கருவி (சாதனம்) ஆக இவ்வுலகில் அருமையாகக் கிடைத்த பிறவி, மக்கட் பிறவி மட்டுமேயாதலால், இதனைப் பெறுதற்கரிய பிறவியென சிறப்பித்துக் கூறப்பட்டதென அறிக.

இத்தகைய அறிய மானிடப் பிறவியை எடுத்த நாம் நம்மிடத்தில் அமைந்துள்ள அறிவு, திறமை, முயற்சி இவைகளால் சிறந்த பணிகளைச்செய்து, ஊதியத்தைத்தேடி, உயர்ந்த மாட மாளிகை, கூடகோபுரம், வண்டி, வாகனம், உண்டி, உடைகள், அணிகள், உடைமைகள் முதலிய வாழ்வுக்கு வேண்டிய பொருள்கள் அனைத்தையும், சேகரித்துச் சீராக அமைத்து, வாழ்வதற்குரிய நல் வாழ்க்கைத்துணைவியாக அழகிய அணங்கொருத்தியை மணந்து, அவளுடன் கூடி இன்பவாழ்க்கை நடாத்தி, நன்மக்களைப்பெற்று, நெடுநாள்வாழ்ந்து சலிப்பெய்தி, நிலையாமையை யுணர்ந்து, வைராக்கியமடைந்து இல்லந்துறந்து, எழில்வனஞ்சென்று, ஏதமில்லாத மாதவம்புரிந்து, இறைவனைக்கண்டு, இன்பவீடடைவோம். ஆனுல் இவ்வெண்ணம் முற்றுப்பெறுமுன் இறந்துவிட்டால், மீண்டும் வந்து, ஈண்டு பிறக்கும் மனிதப்பிறவியில், இளமையிலே ஆண்டவனை நோக்கி அருந்தவமாற்றி வேண்டிய வரமும், வீடும்பெற்றிடலாமே என்று, பகற்கனவு கண்டு, நமரங்காள்! உங்களுடைய வாழ்நாளை வீழ்நாளாக்க வேண்டாம். ஊதியம் தேடி உலக இன்பம் அனுபவித்தற் கேதுவாகிய உங்களுடைய இளமைப்பருவமோ? புதுமழை பெய்யுங்கால், தெருவில் வழிந்தோடும் நீரில் தோன்றி மறையும் குமிழி போல் விரைவில் மாறிவிடும் தன்மைத்தாம் இதுவன்றி, இளமையில், உலக இன்பம் அநுபவிக்க வெண்ணித்தேடிக் குவித்துவைத்த செல்வமோவெனில், பெரிய நீர் நிலைகளில் வீசுகின்ற காற்றினுல் மலைபோல் எழுந்து தரைமேல் மோதியழியும் அலைபோல் அழியும் நீர்மைத்தாம். நீண்ட நாளிருந்து இன்பவாழ்வு வாழ்வதற் கிடமாயுள்ள மனிதயாக்கையோவெனில்? குளத்து நீரின்மேல் கோல்கொண்

டெழுதும்போதே உருத்தெரியாமற்போகும் எழுத்தைப்போல், அழிந்துவிடக்கூடியதாம் என்பதை, நமது குமரகுருபர முனிவரவர்கள் கூறுகின்றார்கள்.

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று". —என:

நமது தாயுமானப் பெருந்தகையோ! "இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே" என்கின்றார்கள். தெய்வப் புலவர் திருவள்ளுவரோ! நேற்று நம்முடனிருந்து அளவளாவிக்கண்டு களித்து உண்டு மகிழ்ந்தவொருவர்: இன்று பெண்டு பிள்ளைகளைப்பிரிந்து பிணமாக இறந்து கிடக்கின்றாரெனும் செய்தியைக் கேட்டுத் திடுக்கிடுகின்ற பெருமையுடைய தாகவன்றோ இருக்கின்ற திவ்வுலகம் என்பதை

"நெருநலுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு" என வியப்புடன் கூறு

கின்றார். ஆதலின், நீண்டநாள் அல்லது நூறாண்டு இவ்வுடலோடு கூடி இந்நிலவுலகில் வாழலாமென்பது பகற்கனவாக வன்றோ முடியும் இது நிற்க? வாழ்நாளிறுதியில் இறைவனைத் தொழுது வீடுபேறடையலாமென்பதும் இயலாத முடிவாம். எதனாலெனின்?

இப்பவோ! பின்னையோ! சற்றுநேரத்திலோ! இரவிதான் படுநேரமோ, இரவிலோ! பகலிலோ! உதயகாலத்திலோ! எந்தெந்த வேளைதனிலோ! அப்பிலோ! தீயிலோ! பேயிலோ! நாயிலோ! அரவுதான் பெருமிடியிலோ, ஆறாத புண்ணிலோ! நடை நோய்கள் தன்னிலோ! ஆயுதங்களினாலேயோ, செப்பரிய வீட்டிலோ! காட்டிலோ! என்னுயிர் பிரிந்திடும நடராசனே. என்று நடராசப்பத்தில் கூறுகின்றபடி, எந்த நாளில், எந்த நேரத்தில் எந்த நோயினால், எந்த இடையூற்றால், எந்த விடத்தில் எத்தகைய நிலையில் மனமிருக்கும்போது இறப்புண்டாகுமென்று நிச்சயிக்க முடியாத நிலைமையிலிருக்கின்றோமாதலால், இறைவனை எப்படித்தொழ முடியும்.

எண்ணிய எண்ணங்கள் கைகூடாமலேயே இறந்துவிட்டால் மீண்டும் வரும் மனிதப்பிறவியில், ஆண்டவனைத் தொழுதடையலாம் வீட்டையெனில், அதுவும் இயலாத காரியமாம் என்பதை "தடுத்து மேலுமிவ் வுருவமா யினும்பெறல் சற்றல மறைநாகத், திடத்தின் மாதவ ரிருவாகங் கெனவடைந் திருத்தல் சான் றரிதாகக், கிடைத்த தேகமும் விவேகமு மிருக்குஞான் றேகிரீ சனைநெஞ்சே, அடுத்திலாய் பல கவலைமாய்த் தோருணர் வாகினின் றகலாதே" என நமது சாந்தலிங்க ஞானதேசிக மூர்த்திகள் இறந்தபின் மனிததேகம் எளிதினில் கிடைப்பதன்றென்பதை, விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

(தொடரும்)

அறம்.

தவத்திரு. ஐயாறு அடிகள்
(சித்தபாலையதேசிகர் ஆதீனப்புலவர், அடிவாரம், பழநி.)

முன் (மலர் 1 இதழ் 2 பக்கம் 10) தொடர்ச்சி.

இப்புவியிடை, மனைவி மக்கள் முதலானவர்களுடன் மனையறத்தினை முறைப்படி மாண்புற நடாத்திய ஒருவன் வானுறையுந் தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப் பெறுவான். புவியிடை நுகர வேண்டியவற்றை நுகர்ந்த ஒருவனுக்குத் துறவு தானே வந்தெய்துவதாகும். "துய்ப்பன துய்த்தோன் துறத்தலியல்பே" என்றார் பிறரும். பிறந்தது முதற்கொண்டு ஒவ்வொன்றாகத் துறத்தல் உலகியல். சிறு குழைந்தைகள், முதலில் தாயினிடம் பற்றுடையனவாய்த் தாய்ப்பாலருந்தி வளருகின்றன. சில ஆண்டு கழிந்தபின் தாய்ப்பாலை விடுகின்றன. வண்டலாட்டயரும் காலத்தே, அயலகத்துச் சிறுவர் சிறுமியருடனும், விளையாடற் கருவிகளுடனும், பற்றுதலுடையனவாய்த், தாயினையும் சற்றே விடுகின்றன. ஐந்தாவதாண்டிற் பெற்றோர்கள் பள்ளியில் வைத்தபிறகு, ஆசிரியரிடத்தும், தன்னோடு உடன் பயிலும் மாணவரிடத்தும், பற்றுண்டாகின்றது. கற்பன கற்று கேட்பன கேட்டபின், மனை வாழ்க்கையிற் பறறுண்டாய் மனைவி மக்கள் முதலியவர்கள் பாற் பற்றுண்டாகின்றது.

இவ்வுல கியல்பினை யறிந்த ஒருவன் நில்லாத உலக வாழ்வினை வெறுக்கின்றான். இப்பற்றினை ஒழிக்கப் பற்றற்றான் பற்றினைப் பற்றுகின்றான்.

மனைவாழ்க்கையிற் பயின்ற அருட்செல்வத்தை மட்டும் விடாதவனாய், ஏனைய பற்றினை விடல்வேண்டும் "அருளொடு புணர்ந்த அகற்சி" என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் திருவாக்கு. அகற்சி அகலுதல், அல்லது விடுதல்.

அருளாவது பிற உயிர்களிடத்தே இயல்பாகச் செல்லுவதோர் உள்ள நெகிழ்ச்சி. பிறிதோர் உயிர்க்கு யாதானுமோ ரிடருறின் அதனைக் கண்டவுடன் இயல்பாகவே துயருறல் பெரியவரியல்பாகும், "பெரியவர் தந்நோய் போற் பிறர் நோய் கண்டுள்ளம், எரியின் இழுதாவர்" என்பது சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்காகும், எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க நினைப்பதுவே பெரியவரியற்கை பொருளான் வரும் செல்வங்கள் பூரியரிடத்தும் உள ஆவன, அருளான் வரும் செல்வங்களோ ஆன்றோர்களிடத்து மட்டுமே தானே வந்துறுவன. ஆனதுபற்றியே நமது ஆசிரியர் திருவள்ளுவப்

பெருந்தகையார். "அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட் செல்வம் பூரியார் கண்ணுமுள"

என்று அருளினர், நல்ல நெறியினனே தேடி ஒவ்வொருவரும் அருளினைக் கையாள வேண்டும். ஏனென்றால் பலவகையாலும் உயிருக்குத் துணையாதென்று ஆராயுமிடத்து அவ்வருளே உயிர்த்துணையாம்,

நல்ல வழியினனே தேடி அருளை ஆளலாவது, ஊனினை உண்டு தமதுடம்பைப் பேணி நாம் உயிர்களிடத்து அருண்மிக உடையேமென்பார், உலகிடைப் பலருளர். ஊரார்களிடத்துப் பொருள் பறித்து அறக்கூழ்ச்சாலை கட்டி உயிர்கள்பால் அருளுடையேமென்பாரும் பலருளர் ஆகையால் அவர்களைப் போலாகாமல் அறநெறியிலே நின்று அதனாலே பக்குவப்பட்டு எழுகின்ற அருளினையாளலாகும். அல்லாதது போலியே உண்மையாகாதென்பது ஒருதலை.

" தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙன மாளும் அருள் " (திருக்குறள்)

அருளொடு பொருந்திய திருவுளத்தினையுடையார், இருள் பொருந்திய துன்ப உலகிடைச் சேரவேமாட்டார் உலகிடை யுயிர்களைப் பாதுகாத்து அருளினைக்கையாள்பவர்க்குத்தானஞ்சும் தீவினைகள் உளவாகா

பூமியை வெட்டுபவரும், தோண்டுபவர்களும், மிதிப்பவர்களும், துவைப்பவர்களும், உலகிடைப் பலருளர். அவ்வாறு வருத்துபவர்கட்கும் பலவகை வளங்களையும் பூமியானது அகம் கனிந்து உதவுகின்றது. அதனாலே தனது நிலை கலங்கலும், கலங்கி வருந்தலும் பூமிக்கின்றாம். தன் பெருமைக்குச் சிறிதும் குறைவின்றி நிலை துளங்காதிருத்தல் கண்கூடு. இப் புவியிடை வீசுகின்ற காற்றோ என்னில் ஒவ்வோரமையத்து மாறுபட்டெழுகின்றது அருள் கொஞ்சமும் இல்லாமல் மரங்களைச்சாடி, வேரோடு பறித்தும் முறித்தும் தள்ளுகின்றது. கடவுளர்க்காம் மலர்களை யுதிர்க்கின்றது, விலங்குக் கூட்டங்களை வெருட்டுகின்றது, மரக்கலங்களை கடல் நடுவே கவிழ்க்கின்றது, இவ்வாறாய உயிர்கள் பலவற்றிற்கும் பெருங்கேடு விளைக்கின்றது. இத்துடன் நில்லாமல் நீரே நெருப்பே என்றிவை வெகுண்டு எழுந்தால் அவைகட்கும் துணையாக நின்று ஆற்றொணுத் துயரினை விளைக்கும் இயல்பானது. அதனால் எவ்விடத்தும் ஒரு நிலையிலே நில்லாமல் ஆண்டாண்டோடி அல்லலுற்றவண்ணமாய் இருப்பது.

நிலம் அருளாளவர்க்கு அல்லலன்றாம் என்பதற்கும் காற்று அருளாளார்க்குக் கரியாம் என்பதற்கும் ஏற்ற சான்றுகளாவன, "அல்லல் அருளாள்வார்க்கில்லை வளிவழங்கு, மல்லல்மாஞாலம் கரி" உறுதிப் பொருள் அறம். அறமே உயிர்க்குறுதியாவது. ஆகலாலும்

அறத்தினைக் கைவிட்டவர் உறுதியில்லாமல் நிலைகெட் டலைவாதலாலும் அக்கேட்டினைக் கருத்துட் கொண்டவர் அருளைக்கைவிடார் ஆகையாலும் அக்கேட்டினை மறந்தவரே உயிர்களிடத்துச் செல்லும் அருளினைவிட்டுக் கேடுசெய்து வருபவர்களாவர். இவர்களே உறுதிப் பொருளினை விட்டுவிலகியவர்.

இவ்வுலக இன்பங்கட்குக் காரணம் அறத்தாற்றின் ஈட்டிய பொருள். அதுபோல அவ்வுலக இன்பங்கட்குக் காரணம் அருளே. அருள் அற்றவன் ஆற்றும் அறம் உண்மை யுணர்வில்லாதான் மெய்ப் பொருளினை யறிந்தாற்போல்வதாகும்.

மெய்ப்பொருளாவது அறிவு நூல்களிலே கூறப்படும் உண்மைப்பொருள். அறிவை வளர்த்து அதுமுதிர்ந்து பக்குவப்பட்ட பின் அதனையே துணையாகக் கொண்டு அறியத்தகுந்தது உண்மைப் பொருள். எனவே அதனைப்பண்படுத்திப் பயிலா அறிவிலி உண்மைப் பொருளினை அறியான். ஒருகால் அவன் அவ்வுண்மைப் பொருளினை ஆன்றோர் வாயிலாகக் கேட்பினும், அல்லது நூல்களிற் காணினும் உணரமாட்டாமையால் அதனாற் பெறத்தகுந்த பயனைப் பெறான். அங்ஙனமே அருளிலான் அறத்தினைச் செய்தல் அரிது ஒருவாறு செய்யினும் அறங்களுக்கு அடிப்படையான அருளின்மையான் அவன் ஆற்றுமறங்கள் நிலையுறுவாய் அவனுக்குப் பயன் அளியாது அழியும். "தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேதரின் அருளாதான் செய்யும் அறம்" அருளொடும் அன்பொடும் வருமேல் இவ்வுலக இன்பத்துக் காரணமான பொருளைக் கொள்ளலாம் அங்ஙனம் வாரா தொழியின் தள்ளத் தக்கதே.

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரளவிடல்" —திருவள்ளுவனார்

சோழ மன்னர்களுள் ஒருவனாகிய கோப்பெருஞ் சோழன் என்பான் கவிமன்னவனுமாவன். அவன் தன்னுயிரேபோல மன்னுயிரனைத்தும் புரப்பவன். அங்ஙனம் புரப்பதற்குப் பொருள் வருவாயினைப் பெரிதும் நாட்டிடைப் பரவச் செய்ய வேண்டியவன் இத்தகையோன்.

"அருளும் அன்பும்நீக்கித் துணை துறந்து
பொருள் வயிற்பிரிவோர் உரவோராயின்
உரவோ ருரவோ ராக
மடவமாக மடந்தை நாமே. —குறுந்தொகை.

என்றியம்பினான்.

(தொடரும்)

★

சைவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.

முன் (ம 1 இ 3 ப 28) தொடர்ச்சி.

மங்கலம்.

மங்கலத்தினிலக்கணம் இத்தகைய தென்பதையும், அதன் வகையினையும், அது நான்முகப்பி லின்றியமையாத வேண்டற்பால தென்பதையும், மற்றும் அதுகுறித்த சங்கை சமாதான மாதியவற்றையும், தத்துவானுசந்தானம், நியாயப்பிரகாசம், தருக்க சங்கிரக தீபிகை, முதலியவற்றுட் கண்டு கொள்க. ஈண்டு விரிக்கிற் பெருகும்.

காமிகமுதலிய சைவாகமங்களின் கண்ணுள்ள ஞானபாதத்தின் ஆசங்கை நீக்கி, அவற்றின் பொருளுண்மையைப் பொதுவியல்பு, சிறப்பியல்பு என விருவகைப்படுத்துக் காட்டி யுப தேசித்தற்கு * இரௌரவாகமத்தின் கண்ணெழுந்த சிவஞான போத நூலினைத் தம்முலகமுஞ் சிவஞானம் பெற்றுச் சிவனடியி விரண்டறக் கலத்தற்பொருட்டு, மொழிபெயர்த்துப் பொழிப்புரைப் பானெடுத்துக் கொண்ட ஆசிரியர் மெய்கண்டதேவர்.

> "பொற்புறு கருவி யாவும் புணராமே யறிவி லாமைச்
> சொற்பெறு மதீதம் வந்து தோன்ருமே தோன்றி நின்ற
> சிற்பர மதனு லுள்ள செயலறுத் திடவு திக்குந்
> தற்பர மாகி நிற்றல் சாக்கிரா தீதந் தானே"

எனச் சிவப்பிரகாசங் கூறுகின்ற சாக்கிரா தீதத்தை யுடையராய்த் தமக்கு இடையூறு சிறிதும் வாராமை யறிந்தா ராயினும், ஆன்ரோ ரொழுக்கத்தைப் போற்றும் பொருட்டும், மாணவர்கட்குத் தம்மிடத்தே யுண்டாகும் நாத்திகப் பிராந்தி நீங்கி ஆத்திகபுத்தி யுண்டாதற்பொருட்டும், முதற்கண் இடையூறு நீக்குதற்குரிய விநாயகப் பெருமானை வாழ்த்துவதாகிய மங்கலங் கூறுகின்ருர் :-

> கல்லா னிழன்மலை வில்லா ரருளிய
> பொல்லா ரிணைமலர் நல்லார் புனைவரே.

இ ...... ள் கல்லால் நிழல்—கல்லாலின் நிழலின்கண்ணெழுந்தருளியிருந்து, மலைவு இல்லார்—இந்நூலால் நந்திபெருமானுக்கு ஐயந்திரிவுகளை நீக்கியருளிய முதலாசிரியர், அருளிய—மேன்

---

* இரௌரவம் என்பது "ருரு" என்னும் பேருடையாருக்கு உபதேசிக்கப்பட்டது என்னும் பொருள் பயக்கும் தத்தாந்த மொழி. "ருரு" என்பார் பிரணவர் முதலியோருக்குக் காமி காதியாகமங்களைச் சதாசிவமூர்த்தி யுபதேசிக்கும்போது கேட்டு நின்ருர்.

மேற் கருணை செய்யும் பொருட்டு, பொல்லார்—பொல்லாத பிள்ளையாருடைய, இணைமலர்—ஞானசத்தி கிரியாசத்தி யென்னுந் திருவடித் தாமரைகளிரண்டனையும், நல்லார்—கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர், புனைவர்—தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு அடிமுடிபோல் அடங்கி நிற்பர்.

வாழ்த்தும் வணக்கமும் பொருளியல் புரைத்தலும் என மூவகைப்படும். மங்கலத்துள், இது பொருளியல் புரைத்த லெனக் கொள்க இவற்றை வடநூலார் முறையே ஆசி, நமஸ்காரம், வஸ்து நிர்த்தேசமென்பர்.

நந்தி பெருமானுக்கு இந்நூலை யறிவுறுத் தருளிய முதலாசிரிய ரென்பதை யுணர்த்துவான் கல்லானிழல் என இடங்குறிப்பித்தார். சிவாகமப் பொருள்க ளொன்றோ டொன்று மாறுபடுவன வாகக் கருதி மலைந்து வினவிய நந்திபெருமானுக்கு, இந்நூலால் மலைவு நீக்கி யருளினா ரென்பார் மலைவில்லார் என்றார். இல்லார் என்பதை இல்லையாமாறு செய்தாரெனப் பொருள் கொண்டுப் பண்படியிற் பிறந்த வினையாலணையும் பெயராகக் கொள்க. இனிமலை வில்லா ரொன்பதற்கு, மேருவை வில்லாகவுடைய ரெனப் பொருள் கொண்டுக் கல்லானிழலில் எழுந்தருளியிருந்து வீடுபேற்றையும், மேருவை வில்லாக வளைத்துப் பகைவரை வென்று யோகத்தையும் அளித் தருளினோர் எனினும் அமையும். எனவே ஐந்தொழிற்கும் வினைமுதல் அவரே என்பதாயிற்று

அருளிய என்பது செய்திய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம் அது நல்லா ரென்னும் பிறவினை முதல் வினையாகிய புனைவர் என்பதைக் கொண்டு முடிந்தது கல்லானிழலில் எழுந்தருளியிருந்து நந்தி பெருமானுக்கு மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர் கருணைமிக் கூர்ந்து, புனைந்த நல்லாருக்கும் அருளுவர் என்பது தோன்ற அருளிய என்றார். அருளிய பொல்லார் எனப் பெயரெச்சமுடிபாகக் கொள்ளினும் அமையும். பொள்ளார் என்பது பொல்லார் என மரீஇயிற்று. எனவே சுயம்பு மூர்த்தி யென்றவாராயிற்று. இணைமலரொன்பது பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்த் திருவடியை யுணர்த்திற்று. இணை யென்பதைத் திருவடிக்கு அடையாக்கி இருபெயரொட்டாகு பெயரெனவும், புனைவர் என்பதற்கேற்பத் திருவடியை மலராக வுருவகஞ் செய்தார் எனவுங் கொள்ளினும் அமையும் இணை மலர் புனைதலாவது ஈண்டு அடி முடி போல் அடங்கி நிற்றல் எனக் கொள்க. எனவே தாழ்வினையுடைய சீவன் உயர்வினையுடைய சிவனிடத்து அழுந்தி யொன்று பட்டு நிற்கும் அத்துவித நிலையினைக் கூறியவாயிற்று இதனை

" தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்
கூடலைநீ யேகமெனக் கொள் "

என வருந் திருவருட் பயனுற் கண்டு கொள்க, (தொடரும்)

அவிரோத வுந்தியார்.

சுவாமி முக்தானந்தா அவர்கள்,
சங்கமூர்த்தி ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.

முன் (ம 1 இ 3 29-பக்கம்) தொடர்ச்சி.

கலிமடல் விளக்கம்:—(பெம்மான், தத்துவராய சுவாமிகளால் அருளப்பட்ட, அடங்கன் முறையுளமைந்த 18 நூல்களுள் ஒன்று, கலிமடல். இந்நூலின் முற் பகுதியிற், சில வரிகளே, ஈண்டெடுத்துக் காட்டப் படுகின்றன.)

அவை—"அருநான் மறை நூலொடு"—அருமையான நான்கு மறைகளாகிய நூல்களோடு, "ஆகம நூல்"—இருபத்தெட்டு ஆகம நூல்களும், "மறறும், உரைசான்ற நூலெல்லாம்"—இன்னும் புகழ் மிகுந்த நூல்கள் யாவும், "ஓதுகின்ற தோரில்"—உரைக்கின்ற பொருள் களை எண்ணிப் பார்க்கப் புகுந்தால், "பொருள் நான்கே"—நான்கு பொருள்கள் மட்டுமே யாம், "அந்நான்கும்"—இங்ஙனம் (எல்லா நூல்களாலும் உரைக்கப்படுகின்ற) அந்த நான்கு பொருள்களும் "பொய்ம்மையற"—பொய்யாந்தன்மை நீங்கி, "மெய்ம்மை தெரிவார்"—மெய்யுணர் வுடையோர்கள், "நேரே தெரியுங்கால்"—நேர்மையாகக் (அந்தக்கரண விருத்தி, உள்நோக்கிச் சென்று, சென்று, தாக்கியதால் அறியாமை அகல இயல்பாகவே, இருள் கடிந் தெழுகின்ற ஞாயிறே போன்று மிளிர்ந்து, மிளிர்ந்து, மிகுந்தொளிரும் பொருளைத் தானுகக்) காணுங்கால், "தருமம்"—அறமெனப் படுவது, "தீங்கொன்றும் மேவா"—எல்லை யற்றுக் குறைபாடு சிறிதும் பொருந்தாத, "நிருபா திகம் ஒன்றே"—பற்றேது மற்ற பொருள் ஒன்றேயாம்;

"பொருளாவதும்"—(இரண்டாவதாக எண்ணப்பட்ட)பொருள் என்ற அதுவும், "என்றும் பொன்றுப் பொருளே"—எஞ்ஞான்றும் அழிவுறாத மெய்ப் பொருளே யாகும்;

"இன்பம்"—(மூன்றாவதாகத் தொடர்ந்து கூறப்பட்டுள்ள) இன்பமோ? "இரியாத இன்பமே"—என்றும் பிரிதலற்ற இன்புரு வேயாம்;

"சென்று அடைதற்கு அரிதாய"—(இடம் பெயர்ந்து ஓரிடங் குறித்துப்) போய் அடையப் படுவதாய் அல்லாததான "வீடும்"—(அறம் பொருள், இன்பம் என்ற வரிசை இறுதியில், "விடுதல்" என்ற தொழிற் பெயராற் கருதப்படும்) பற்றறு நிலையும், "அதுவேயாய்

நின்றால்"—அந்த விட்டதாய்க் கருதப்படும் தனி நிலையாகவே நிலை பெறுமானால்,

"உரையாடுவ தெல்லாம்"—சொல்லுவார் சொற்கள் யாவும், "ஒன்றாய இன்பப் பெருமானை யல்லவோ?"—(எடுத்தியம்பத் தனி வடிவம் ஒன்றோ? ஒருத்தியோ? ஒருவனோ? இலையேனும் வேறற்ற) ஒன்றாகவே நிலைபெற்ற, இன்புருவப் பெரும் பொருளை யல்லவா (சொல்லுகின்றன) (இப்பொருளை நாடாமல்) "பேதமாய்"—(இவ்வறம் முதலாயவைக்கு) முரண்பாடாக, "வேறேபொருள் நாடி"—வெவ்வேறு பொருள்களைக் குறித்து, "நின்று புலம்புவோர்க்கு"—ஓயாமல் பல படித்தாய்ப் பிதற்றுகின்றவர்கட்கு, "அந்த" — (ஒன்றேயாய) அத்தகைய, "பரமானந்தத்தை"—பேரின்பமாகிய பொருளை, "பகரப் படுமே"—சொல்லி யறிவித்து விடுதல் கூடுமா? கூடாதென்பதே.

இங்ஙனம், எல்லா நூல்களாலும் தெளிந்ததுந் திரண்டதுமான உண்மைக் கருத்தையே, நமது சாந்தலிங்க சுவாமிகள் சூத்திரம் போன்றமைத்துள்ள, மிகச்சிறு பாவில், எளிய முறையில், தெளிய விளக்கியுள்ளார்கள் காண்பாம்.

அவிரோத உந்தியார்:—

"அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கிற்
சிறந்த பயன்வீடென் றுந்தி பற
தேரின்வீ டேயெலா முந்தி பற"

பொருள்:—அறம் பொருள் இன்பம் வீடென்பனவே, அறிவுடையோரால், அடையப்படும் பயன்கள். எல்லா நூல்களிலும் ஒரே படித்தாய்க், கூறப்பட்டுள்ளவை இவையே; இந் நான்கனுள்ளுஞ், சிறந்த பயனாயுள்ளது, வீடொன்றே.

ஏசிறுமியர்காள்! இவ்வீடொன்றுதான், ஒப்புயர் வில்லதென்று' உந்திப் பறவுங்கள்; நன் காய்ந்து நோக்கித் தெளியினோ? முற் கூறப் பட்ட மூன்றும், வீடொன்றேதான்; என்று கூறி, உந்திப் பறவுங்கள். என்று அருளியுள்ளார்கள் காண்பாம்.

அறம் வீடாவ தெங்ஙன மெனில்? :—

அறமாவது, பெரும்பான்மையும், ஈதல், இடுதல், கொடுத்தல் துறத்தல், பற்றறுதல் என்னும் பெயர்களால், எல்லா நூல்களாலும், உலக வழக்காலும் புகழப் படுவது. இத்துணைச் சொற்களாலுந், தெளியப் படும் பொருள், விடுதலொன்றேயாய் இதையே, தான மென்பர் ஆதலால், முற்றும் பற்றறத் துறத்தலினும் மேம்பட்ட, அறமே இல்லை. இவ்வறமும் (I) விடுதல் (II) நோற்றல் என்ற இரண்டனுள்ளே, விரவி யடங்குகின்றது.

(இவ்விரண்டின் விளக்கம் பின்னிதழில்) (தொடரும்)

யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

திரிமூர்த்தி சுவாமிகள்.
(ஆனந்தாச்சிரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 3 ப 30) தொடர்ச்சி.

உடலில் எறும்புகள் எப்பொழுது மொய்க்கின்றனவோ, அப்பொழுதே தியானத்திலிருந்து நீங்குகின்றான். அவன் பிறகு தேள்களால் கடிக்கப்படின் எங்ஙனம் தியானிப்பன். உடலிறுதியிற்றான் எங்ஙனம் சுகமுள்ளவனாவன். (ம. 33) ஆகையால் பொய்யான எண்ணத்தால் மறைபட்ட மூடர்கள் உண்மை நெறியை அறியார்கள்.

(அ... கை) தானல்லாததைத் தானெனக் கருதும் தடிப்பே கேடனைத்திற்கும் காரணமெனல்

(பொ... ரை) எவனுக்கு நானென்ற தடிப்பு இறந்து விட்டதோ, அவனுக்கு (ம 34.) உடலிருப்பினும் இறந்ததேயாம். பின்னர் இதற்கு நோய்கள் எங்ஙனம் உறுவன, நீர், நெருப்பு, அம்பு; கடி, முதலிய துன்பம் எதற்கு உள்ளதாம. (ம, 35) நானென்ற எண்ணம் எவ்வெப்பொழுது சுருங்கியும் விரிந்தும் தோன்றுமோ, அவ்வப் பொழுது சுருங்கலால் இவனுக்கு நோய் முதலியன அழிகின்றன. விரிதலால் அவைகள் அவனைத் தொடருகின்றன. (ம 36) முதலின்றி ஒருகாலும் தொழில் நிகழ்வதில்லை. அதுபோல் நானென்ற தடிப்பின்றி உடலில் துன்பம் எவ்வாறுண்டாம். (ம. 37)

(அ . கை) யோக சித்தியுள்ளவனுக்கு ஈசுவர நிலையும், ஜீவன் முத்தி நிலையும் உளதாகின்றன

(பொ... ரை) உடலால் எல்லோரும் வெல்லப்பட்டனர். யோகிகளால் உடல் வெல்லப்பட்டது. வெல்லப்பட்ட அந்த உடல் அவர்களுக்குத் துன்ப முதலிய பலனை எங்ஙனம் செய்வதாகும். (ம. 38) அந்த யோகி ஒருவனாலேயே புலன்கள், மனம். புத்தி ஆசை, வெகுளி, முதலிய யாவும் வெல்லப்பட்டன. ஆகையால் அவன் எதனாலும் துன்புறுவதில்லை. (ம. 39) ஐம்பூத முதலிய தத்துவக் கூட்டங்கள் முறையாக ஒடுக்கப்பட்டன. எழு தாதுக்கள் வடிவ உடல் யோக நெருப்பால் மெல்ல எரிக்கப்பட்டன. (ம. 40) இதுவும் அது.

பொ... ரை) வேற்றுமையாகிய கட்டினின்றும் விடுபட்டதும், சிறந்த பல ஆற்றலைப் பெற்றதும், மிக்க வலிமையுள்ளதுமான யோகியின் உடல் தேவர்களாலும் அறியப்படுவதில்லை. (ம 41) ஆகாயம் எப்படியோ, அப்படி யோகியின் உடல் உள்ளது. ஆகாயத்தைக்காட்டிலும் தூய்மையானது நுண்ணியதினும் மிக்க நுண்ணியதாய் காணத்தக்கது. பெரிதினும் பெரிதாம். ஜடப்பொருளினும் ஜடப்பொருளாம். (ம. 42) இதுவும் அது.

(பொ....ரை) யோக வன்மையால் அவன் மீண்டும் மறிப்பதில்லை. அடத்தால் அவன் இறந்தவனே யாவன். இறந்தவனுக்கு இறப்பு எவ்வாறுண்டாம். (ம 45) எல்லோருக்கும் எதில் மரணமுளதோ, அதில் அவன் உயிருடன் வாழ்வன், எதில் மூடர்கள் வாழ்கின்றனரோ, அதில் அவன் இறந்தவனாகவே இருப்பன் (ம 46) இதுவும்அது

(பொ....ரை) அவனுக்குச் செய்யத் தக்கது ஒன்றுமே இல்லை. செயலோடு அவன் ஒட்டுவதும் இல்லை. எல்லாக் குற்றங்களினின்றும் நீங்கி தூய்மை யுள்ளவனாய் என்றும் ஜீவன்முக்தனாகவே உளன்(ம 47)

(அ....... கை) போலிஞானிகளை இகழ்தல்.

(பொ...ரை) மிக்க பற்றுள்ளவர்களும், ஞானியாக நடிப்பவர்களுமான மற்றவர்கள் என்றும் உடலால் வெல்லப்பட்டவர்களாவர் நிந்தித்தற்கான உடலுள்ள தசைப் பிண்டங்களான அவர்கள் எங்ஙனம் யோகிகளோடு ஒப்பாவார்கள். (ம 48) உடலிறுதியில் போலி ஞானிகளால் நல்வினைகளின் பயன் நுகரப்படுகிறது. இங்ஙனம் அந்தந்த வினைப்பயனை நுகர்ந்தவனாய் மறிப்பன். போலியறிவினன் மீண்டும் பிறப்பன் (ம 49)

(அ.........கை) அவர்கட்குச் சித்தர்களின் சேர்க்கையால் நற்பயன் உளதாதல்.

(பொ....ரை) பிறகு நல்வினைப் பயனால் நல்ல சித்தனோடு கூட்டுறவு உள்ளதாகிறது. அக்கூட்டுறவால் சித்தனது அருளால் யோகநிலை பெறுகின்றான். வேறுவழியாலாவதன்று (ம 50) அதனால் உலகவாழ்க்கை கெடுகின்றது. வேறு வழியாலாவதன்று, எனச் சிவனால் சொல்லப்பட்டது.

(அ....கை) ஞானயோகங்கள் ஒன்றற்கொன்று உதவியாயிருத்தல்.

(பொ....ரை) பிரமாவே! யோகமின்றிய ஞானம் முக்தியின் பொருட்டு ஆவதில்லை (ம 51) ஞானமின்றிய யோகமுமே ஒருக்காலும் சித்தியைத் தருவதில்லை

(அ....கை) யோகமே சிறந்த முக்தி வழியெனல்.

(பொ...ரை) அனேகம் பிறவிகளில் ஈட்டிய ஞானத்தால் யோகம் அடையப்படுகிறது. (ம 52) ஞானமோ வெனில் ஒரு பிறவியிலேயே யோகத்தாலுண்டாகின்றது. ஆகையால் வீட்டின்பத்தைத் தருவது யோகத்தினும் சிறந்த வழியில்லை. (ம 53) நீண்ட நாள் ஞானத்தை நன்கு ஆய்ந்து நான்முக்தன் என்று எண்ணுகின்றான். எண்ணுவதாலேயே அத்துணை விரைவில் இவன் முக்தனாவானா என்ன? (ம 54) ஆகான் என்பதாம். பின்னர் நூற்றுக்கணக்கான பிறவிகளில் பழகிய யோகத்தாலேயே விடுபடுகின்றான். யோகத்தால் பிறப்பு இறப்புக்கள் அவ்வாறு மீண்டு மீண்டும் உண்டாவன அல்ல (ம 55)

(தொடரும்)

" து ற வி "

திங்கள் வெளியீட்டிற்கு நன்கொடை யளித்தவர்கள்.

திருமிகு சுவாமி அருணகிரி நாதரவர்கள் ... 100—0—0
(குளப்பாக்கம், சென்னை.)

,, சுவாமி முக்தானந்தா அவர்கள் .... 50—0—0
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம்,
வியாசர்பாடி, சென்னை.)

,, T. N. பரிமணம் பிள்ளை அவர்கள் ... 50—0—0
(அரிசிமண்டி, சீர்காழி, தஞ்சை.)

துறவி யிதழின் முன்னேற்றங்கருதிப் பொருளீந்த தங்களது நன் முயற்சிக்கு சங்கத்தின் நன்றி என்றும் உரியது.

குறிப்பு.

" துறவி " என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துகளை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15-க்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும்; சுவாமி சொரூபானந்தா, கீழ்ப்பாலூர்.

13